தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
நவம்பர் 23, 2018

சமூக செயற்பாட்டாளர்

# ஹென்றி திபேனுக்கு பல்கிவாலா விருது

■ மதுரை

மதுரை மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநரும், வழக்கறிஞருமான ஹென்றி திபேனுக்கு நானி எ.பல்கிவாலா நினைவு விருது வழங்கப்பட உள்ளது.

தேசிய அளவில் மிக உயரிய மற்றும் பிரபலமான விருதுகளில் நானி எ.பல்கிவாலா விருது முக்கியமானது. இந்த விருது ஆண்டுதோறும் முக்கியமான சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு, சாதனையாளர்களுக்கு வழங்கப்படும். இந்த ஆண்டு இவ்விருது மதுரையைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளரும், மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநருமான வழக்கறிஞர் ஹென்றி திபேனுக்கு வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


▲ ஹென்றி திபேன்

இந்தியாவில் சமூக மாற்றத்திற்குச் சிறப்பாகச் செயலாற்றிய ஆர்வலர்களைத் தேர்ந்தெடுத்து இந்த விருது வழங்கப்படுகிறது.

அந்த அடிப்படையில் ஹென்றி திபேனுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

விருது தேர்வுக்குழுவில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் சுஜாதா மனோகர், எஸ்.என்.வரயஹவா மற்றும் இன்போசிஸ் பவுண்டேஷனின் இயக்குநர் சுதா என்.மூர்த்தி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்த விருது மும்பையில் உள்ள நானி எ.பல்கிவாலா நினைவு அறக்கட்டளையால் வழங்கப்படுகிறது. இந்த விருதுடன் ஹென்றி திபேனுக்கு ரூ.2,50,000 காசோலையும் வழங்கப்படுகிறது.